





# அலகு VII

## ஊடகத் தமிழ்









தகவல் தொழில் நுட்பத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் உலகை ஒரு கிராமமாக மாற்றிவிட்டன. மிகத் தொலைவிலுள்ள நாடுகளில் நடைபெறும் அரசியல் மாற்றங்கள், நிகழ்வுகள் யாவற்றையும் உடனுக்குடன் அறிந்து கொள்ளும் வாய்ப்பைத் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சி ஏற்படுத்தியுள்ளது. மனிதன் இவ்வளர்ச்சியை அடைய நீண்ட காலம் பிடித்தது.

எங்கோ ஒரு நாட்டில் நடைபெறும் ஒலிம்பிக் விளையாட்டுக் களை நேரடியாகக் கண்டுகளிக்க முடிகிறது. நிலநடுக்கம், எரிமலைக் கொந்தளிப்பு ஆகிய இயற்கைச் சீற்றங்களையும் தகவல் ஊடகங்க ளின் வழி உடனடியாகத் தெரிந்துகொள்ள முடிகிறது; தேவையான நிவா ரணப் பணிகளையும் உதவிகளையும் உடனே பெற முடிகிறது. இவை யாவும் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் சாத்தியமாகிறது.

சினிமா, ஒரு சக்தி வாய்ந்த ஊடகமாகும். இது வெறும் பொழுதுபோக்கிற்காகப் பயன்படும் ஊடகமாக மட்டும் அல்லாமல், பயனுள்ள கருத்துகள் மக்களைச் சென்றடையவும் துணைபுரிகிறது. இத்தகைய தகவல் தொடர்பியல் குறித்தும் மற்ற ஊடகங்கள் குறித்தும் மாணவர்கள் திறன்பெற இவ்வலகு துணைபுரிகின்றது.

செய்தித்தாள், வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்க ளில் ஒரு செய்தி எவ்வாறு இடம் பெறுகிறது என்பதையும் மாணவன் புரிந்து கொண்டு, செய்திச் சித்திரம் தயார் செய்யவும் திறன் பெறவும் வேண்டும். எனவே வானொலி நாடகம் ஒன்றும் அதன் இணைப்பாகத் ‘தாகம்’ என்ற நாடகமும் இவ்வலகில் இடம் பெற்றுள்ளன.

# 17. தகவல் தொடர்பியலின் தோற்றமும் வளர்ச்சியும்

டாக்டர்.வெ. கிருஷ்ணசாமி எழுதி, சென்னை மணிவாசகர் பதிப்பகம் வெளியிட்ட 'தகவல் தொடர்பியல்' எனும் நூலில் வரும் 'தொடர்பியலின் தோற்றமும் வளர்ச்சியும்' என்னும் கட்டுரையின் சுருக்கமே இப்பாடப்பகுதி.

பறந்துவந்த விண்வெளி ஓடம் மெல்ல இறங்கியது. கணினித்திரையில் பார்த்துக்கொண்டிருந்த அறிவியல் அறிஞர்கள் நிம்மதியாகப் பெருமூச்சுவிட்டனர். அப்பாடா! தகவல்கள் வரத்தொடங்கிவிட்டன. பல்வேறு காட்சிகளை விண்வெளி ஓடம் அனுப்பிக் கொண்டிருந்தது. நம்ப முடியவில்லை. இலட்சக் கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள செவ்வாய் கிரகத்திலிருந்து செய்திகளா? இது மட்டுமா? இதற்குமேலும் வளர்ந்துள்ள தகவல் தொடர்பியலின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி அறிய வேண்டாமா?

பிறரைப் பற்றி அறிவதில் மனிதனுக்குப் பேராசை உண்டு. இக்குணமே மக்கள் தகவல் தொடர்பியல் தோன்றக் காரணமாயிற்று. முதலில் அவன் தன்னைச் சுற்றி அறிய விரும்பினான். பின்னர் தன் வட்டாரத்தை அறிய விரும்பினான். அதன்பின் நாடு, உலகம் போன்றவற்றையும் அறிந்துகொள்ள ஆசைப்பட்டான்.

### மொழிதோன்றும் முன்பு

மொழி தோன்றும் முன்பு ஆதிமனிதன் தன்னைச் சுற்றியுள்ள மக்களுக்குத் தேவையான செய்திகளை உடலசைவுகள், ஒலிகள், சீழ்க்கை ஒலி, கூவியழைத்தல் போன்றவற்றின் வாயிலாக அனுப்பினான். ஐம்புலன்களின் வழியாகவும் செய்திகளையும் கருத்துகளையும் அறிவித்துள்ளான். ஒருவரிடமிருந்து ஒரு செய்தி மற்றொருவரிடம் சென்றடைந்து அவரிடம் ஒரு மாற்றம் உண்டாக்கினால் தொடர்பு ஏற்படுகிறது என்று கருதலாம். கருத்துப் பரிமாற்றமே தொடர்பு என்று கூறலாம்.

### ஒலிகளின் வழியே

இயற்கையில் கேட்ட ஒலிகளின் பிரதிபலிப்பே மொழி என்பர். இன்றும் பழங்குடியினரும் வேளாண்மக்களும் ஒலிகளை எழுப்பியே தகவல் தொடர்பு கொள்வதைக் காணலாம். பறையடித்தல், புகைஎழுப்புதல், தீயம்புகளை வானத்தில் எறிதல் போன்ற குறியீடுகள் வாயிலாகத் தூரத்தில் வாழ்ந்தவர்களுடன் செய்தித் தொடர்பு கொண்டுள்ளனர்.

### இசைக் கருவிகளின் வழியே

பண்டைக்காலத்தில் விழா, திருமணம், படையெடுப்பு போன்றவற்றைப் பறையறைந்து தெரிவித்தனர். கால்வாயில் வெள்ளம் வந்ததை உழவர்கள் முரசறைந்து தெரிவித்தனர். நெல் அறுவடை செய்யும் போது 'அரிப்பறை' ஒலிக்கப்பட்டது. ஏறுகளைத் தழுவுவதற்காக 'ஏறுகோட்பறை' முழக்கப்பட்டது. வீரரைப் போருக்கு அழைக்கவும் ஆநிரைகளைக் கவரவும் தண்ணுமையைப் பயன்படுத்தினர். இரவில் விலங்குகள் அணுகாதிருக்கவும் தெருவில் ஆடவர் மகளிருடன் சேர்ந்து கூத்தாடும் போதும் "தொண்டகச் சிறுபறை"யை முழக்கினர். பன்றிகளை விரட்டப் "பன்றிப்பறை" பயன்பட்டது. திருடர்கள் திருட வந்துள்ளதை அறிவிக்கப் 'பேரிகை'யைப் பயன்படுத்தினர். மேலும் ஐம்பெரும் நிலத்திற்கும் பறைகள் இருந்ததை இலக்கியத்தின் வழியாக அறிய முடிகிறது.

"கண்ணகிச் சிலைக்குக் கல்லெடுக்கச் சென்றதை வள்ளுவன் பட்டத்து யானையின் மீதேறிப் பறையடித்து அறிவித்தான்" என்று சிலப்பதிகாரம் செப்புகிறது. "முதுகுடிப் பிறந்தோனாகிய வள்ளுவன் யானை மீதேறி ஊரையும் மன்னரையும் வாழ்த்தி முரசறைந்து செய்திகளை அறிவித்தான்" என்று மணிமேகலை கூறுகிறது. இவ்வாறு செய்திகளை அறிவிக்கும் பணியைப் பரம்பரை பரம்பரையாகச் செய்தவர்கள் "வள்ளுவர்" எனப்பட்டனர்.

### தூதுவர் வழியே

தமிழ் இலக்கியத்தில் 'தூது இலக்கியம்' என ஓர் இலக்கிய வகை உண்டு. அதியமான் நெடுமானஞ்சி அவ்வையாரைத் தொண்டைமானிடம் தூது விட்டதாகப் புறநானூறு (95) கூறுகிறது. பிசிராந்தையார் தன் நண்பன் சோழநாட்டு அரசன்

கோப்பெருஞ்சோழனிடம் அன்னச் சேவலைத் தூது விட்டதாகப் புறநானூறு (67) கூறுகிறது. திருவள்ளுவர் தூது (69) என்றொரு அதிகாரத்தையே எழுதியுள்ளார். சங்கப் பாடல்களில் பறவை, விலங்குகள், மேகம், காற்று முதலியவற்றைத் தூது அனுப்பியதாகக் காணமுடிகிறது. ஆழ்வார்களும் நாயன்மார்களும் குயில், அன்றில், புறா, வண்டு, கிளி, நாரை முதலிய பறவைகளை இறைவனிடம் தூது அனுப்பியுள்ளனர்.

**செய்திப் பரப்பாளர்கள் வழியே**

பண்டைக் காலத்தில் முனிவர்களும் புனிதப் பயணம் செய்பவர்களும் செய்திப் பரப்பாளர்களாக இருந்துள்ளனர்.

சீன நாட்டில் மிக நெடுங்காலமாகச் செய்திகளைக் கவிதைகளாக்கித் தெருவில் பாடிச் செல்லும் வழக்கம் இருந்துள்ளது. வணிகர்கள் நாடுவிட்டு நாடு செல்லும் போது செய்திகளைச் சேகரிக்கும் கருவிகளாகத் திகழ்ந்துள்ளனர். சங்க காலப் புலவர்களும், பாணர்களும், கூத்தர்களும், பொருநர்களும், விறலியரும் செய்திப் பரப்பாளர்களாகவே திகழ்ந்தனர்.

**கடிதங்கள் வழியே**

தொலைதூரச் செய்தித் தொடர்புக்கு எழுத்து பயன்பட்டது. பெரிய வணிகர்களும் செல்வந்தர்களும் நடை, குதிரை, கப்பல் மூலமாகக் கடிதங்களை அல்லது செய்திகளைக் கொண்டு செல்ல ஆட்களை பயன்படுத்தினர். படைத்தலைவர்கள் செய்தித் தொடர்புக்கு பழக்கப்பட்ட புறாக்களைப் பயன்படுத்தினர்.

மதுரையை ஆண்ட திருமலை நாயக்கர் ஒவ்வொரு நாள் இரவிலும் ஸ்ரீவில்லிப்புத்தூரில் குடிகொண்டுள்ள ஆண்டாளுக்கு இரவு வழிபாடு முடித்த பின்னரே உணவு உண்ணும் பழக்கம் உடையவர். இச்செய்தியை அறிய மதுரையிலிருந்து ஸ்ரீவில்லிப்புத்தூர் வரை ஒரு கல்லுக்கு ஒன்றாக மண்டபங்கள் கட்டினார். அவற்றில் பணியாட்களை நிறுத்தி மணி ஒலிக்கச் செய்து செய்தியினை அறிந்தார்.

தமிழ் நாட்டுக் கோவில் சுவர்களில் கல்வெட்டுகளைக் காணலாம். கல்லில் எழுதும் எழுத்துகள் காலத்தால் அழியாதவை. செப்பேடுகள், ஆடுமாடுகளின் தோல், துணி, மரப்பட்டை, ஆமை ஓடு, சிப்பிகள் மீதும் எழுதினர்.

மன்னர்களில் சிலர் வேள்வி செய்யும் போது பிற நாட்டு அரசர்களுக்கு அந்தச் செய்தியைத் தெரிவித்து வேள்விக்கு வருமாறு "திருமுகம்" அனுப்பினர். திருமணம் போன்ற நிகழ்ச்சிகளை "முடங்கல்" எழுதித் தெரிவித்தனர்.

மாதவி தாழைப்பூவின் வெள்ளிய இதழாகிய தோட்டில் பிச்சியினது நாளரும்பை எழுத்தாணியாகக் கொண்டு செம்பஞ்சுக்குழம்பில் தோய்த்துக் கோவலனுக்குக் கடிதம் எழுதினாள் என்று சிலம்பு பேசுகிறது.

பதினோராம் திருமுறையில் இறைவன் எழுதியதாகக் கருதப்படும் கடிதம் ஒன்று காணப்படுகிறது. பாணபத்திரர் என்னும் புலவருக்குப் பொருள் கொடுத்து அனுப்புமாறு சிவபெருமான் சேரமான் பெருமாள் நாயனாருக்கு இக்கடிதம் எழுதியுள்ளார். இது இறைவன் எழுதிய கடிதம். எனவே இது "திருமுகப் பாசுரம்" எனப்பட்டது.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஸ்ரீஎட்டயபுரம் ராஜராஜேந்திரன் மகாராஜ வெங்கடேசுர எட்டப்பபூபதி அவர்களிடம் சமூகத்துக்கு உதவி கேட்டு இரண்டு சீட்டுக் கவிகள் எழுதியுள்ளார். சீட்டுக்கவிகளில் புலவர்களின் பெருமிதத்தைக் காணலாம். இவ்வாறாகக் கடிதங்களும் தகவல் தொடர்புப் பணியைச் செய்துள்ளன.

**மறுமலர்ச்சிக்காலம்**

கி.பி.1300 முதல் 1600 வரை ஐரோப்பா கண்டம் முழுவதும் அறிவு வளர்ச்சி பரவியது. இதன் காரணமாக நூல்களின் தேவை அதிகரித்தது. கையெழுத்துப்படிகளால் மக்களின் தேவையை நிறைவு செய்ய முடியவில்லை. இந்தச் சிக்கலை அச்சிடும் முறை தீர்த்து வைத்தது.

ஜாண் குட்டன்பெர்க் எனும் ஜெர்மனியர் கி.பி.1430-ல் திராட்சைச்சாறு பிழிய பயன்படுத்திய

கருவியிலிருந்து மர அச்சுப்பொறியை முதலில் கண்டுபிடித்தார். முதல் அச்சுக் கூடத்தை நிறுவினார். இதனால் கையெழுத்துப்படியின் காலம் முடிந்து அச்சுக் காலம் தோன்றியது. அதன் பின் அச்சுக்கலை தகவல் தொடர்பின் சிறப்பான சாதனமாக விளங்கியது. அச்சுக் கலையின் வளர்ச்சியால் மேலைநாடுகளுக்கிடையே விரைவான தொடர்பு ஏற்பட்டது. மக்களிடம் உலகக் கண்ணோட்டத்துடன் தேசிய உணர்வும் வளர்ந்தது. அந்நிய மொழி மோகம் மறைந்து தாய் மொழிக் கல்வியும் தாய்மொழிப்பற்றும் ஏற்பட்டன. அதனால் அதிக அளவில் தாய்மொழி நூல்களும் மொழிபெயர்ப்பு நூல்களும் வெளிவந்தன. உலகின் முதல் பத்திரிகை 1605-ம் ஆண்டில் ஆஸ்திரியாவில் வெளிவந்தது.

கி.பி. 1890 -ல் தாமஸ் ஆல்வா எடிசன் 'சினிட்டோஸ்கோப்' என்னும் சலனப்படக் கருவியைக் கண்டு பிடித்தார். லூமியர் சகோதரர்கள் சினிமட்டோகிராபியைக் கண்டுபிடித்தனர். அதன் பின் திரைப்படம் மிகப் பெரிய பொழுதுபோக்குக் கருவியாகவும் விளம்பரச் சாதனமாகவும் செய்திகளை விளக்கிக் கூறும் தொடர்புக் கருவியாகவும் மாறியது.

**மின்னியற்காலம்**

மனித வாழ்வின் வேகம், எதையும் செய்ய வேண்டும் என்னும் உந்துதல் போன்றவை புதிய கண்டுபிடிப்புகளுக்கு வழிவகுத்தன. விண்வெளியில் மின்காந்த அலைகள் ஒலி வேகத்தில் பயணம் செய்கின்றன என்று ஜேம்ஸ் கிளர்க் மேக்சுவல் கூறினார். 1894-ல் மார்க்கோணி என்பார் மின்காந்த அலைகள் வழியாகச் சைகைகளை அனுப்பும் முறையைக் கண்டறிந்தார். தம்முடைய கண்டுபிடிப்புக்கு 'கம்பியில்லாத் தந்தி' எனப் பெயரிட்டார்; வானொலி ஒலி பரப்பிற்கு வழிவகுத்தார்.

ஜாண் லோகிபெயர்டு தொலைக்காட்சியைக் கண்டுபிடித்தார். பௌல்சன் என்னும் டேனிசு நாட்டுப் பொறியாளர் கம்பியில் ஒலியைப் பதிவு செய்யும் கருவியைக் கண்டுபிடித்தார். ஜெர்மானியப் பொறியியல் அறிஞர்கள் காந்த நாடாவில் ஒலியைப் பதிவு செய்யும் கருவியைக் கண்டுபிடித்தனர். 1950-இல் காந்த நாடாவில் படத்தையும் ஒலியையும் பதிவு செய்யும் 'வீடியோ ரிக்கார்டர்' கண்டுபிடிக்கப் பட்டது. 1970-இல் வீடுகளில் பயன்படுத்தும் "கேசட் வீடியோ டேப் ரிக்கார்டர்கள்" நடைமுறைக்கு வந்தன.

செய்தி பரப்பும் முதல் செயற்கைக்கோள் 1958 -இல் உருவானது. செயற்கைக்கோள்கள் பூமியிலிருந்து 22300 கல் உயரத்தில் வைக்கப்படுகின்றன. அவை பூமியின் வேகத்திற்கு இயைந்து சுற்றுகின்றன. அதனால் உலகின் எந்தப் பகுதியுடனும் தொடர்பு கொள்ள முடியும். செயற்கைக்கோள்கள் மூலம் உலகின் பல பகுதிகளுக்கும் வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி போன்ற மின்னணுவியல் தொடர்புகள் அனுப்பப்பயன்படுகின்றன. அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஐசனோவரின் கிறிஸ்துமஸ் வாழ்த்துச் செய்தி செயற்கைக்கோளில் ஒளிபரப்பபட்ட முதல் செய்தி ஆகும்.

**மணிச்சட்டத்திலிருந்து கணினி**

தமிழ்நாட்டில் 'கோணூல்' இருந்தது. கோணூல் கலையில் வல்லவர்கள் கோள் நூலார், காலக்கணிதர், கணியன் எனப்பட்டனர். சங்கப்புலவர்களில் ஒருவர் கணியன் பூங்குன்றனார் ஆவார். சீனர்களின் மணிச்சட்டத்திலிருந்து இன்றைய கணினியின் வரலாறு தொடங்குகிறது. "கம்ப்யூட்டர்" என்னும் சொல்லுக்குக் "கணிக்க உதவும் கருவி" என்பது பொருளாகும். இன்று கணினி விரைவான தகவல் தொடர்பிற்குப் பயன்படுகிறது.

உலக நாடுகளிடையே விரைவான தகவல் தொடர்புப் பரிமாற்றம் நடைபெற 1962-இல் பன்னாட்டுச் செய்தித் தொடர்பு அமைப்பு உருவாக்கப்பட்டது. அது 1965-ல் 'முதல்பறவை' என்னும் செயற்கைக்கோளை வானில் அனுப்பியது. பின்னர் உலகத் தொடர்பிற்குப் பயன்படும் பல புதிய கோள்களை வானில் அனுப்பியுள்ளது. அது பன்னாட்டுத் தகவல் தொடர்பிற்கு உறுதுணையாக உள்ளது.

**புதியதோர் உலகம் செய்வோம்.**

தகவல் தொடர்பின் புதிய வடிவம் இணைய தளம். உலகின் எந்த மூலையில் இருந்தாலும் எந்தத் தகவல் வேண்டுமானாலும் ஒருசில நிமிடங்களில் நம் கைக்குள் வந்து சேர்ந்துவிடும். இன்று இணைய தளமானது இ.காமர்ஸ், இ.மெயில், இ.லைப்ரரி, இ.நியூஸ், இ.ஷாப்பிங், இ.ஜாப், இ. பாங்கிங் என்று பல 'இ' வரிசையில் வையகமெங்கும் வலைப்பின்னல் விரித்து 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனும் இலட்சியத்தை நோக்கி வீறுநடை போடுகிறது.

புதிய கண்டுபிடிப்புகளால் உலகம் சுருங்கி விட்டது. எதிர்காலத்தில் கதிரவனின் ஒளியாற்றலை அதிகமாகப் பயன்படுத்தும் நிலை ஏற்படும். முப்பரிமாண நிழல் படத்துறையிலும் கதிர்வீச்சுமுறை பயன்படும். புதிய கண்டுபிடிப்புகள் சமுதாய முன்னேற்றத்திற்கும், உலக அமைதிக்கும், பொருளியல் வளர்ச்சிக்கும், விரைவான தகவல் தொடர்புக்கும் பயன்படுதல் வேண்டும்.

**விடை காண்போம்**

- ஆதி மனிதன் செய்தி அனுப்பப் பின்பற்றாத ஒரு வழி முறை கீழ்ப்பட்டியலில் உள்ளது. சுட்டிக் காட்டி "√" அடையாளமிடுக.
    - உடல் அசைவுகள்
    - ஒலிகள்
    - சீழ்க்கை ஒலி
    - பறையடித்தல்
    - தீயம்புகளை வானத்தில் எறிதல்
    - கூவி அழைத்தல்
    - புல்லாங்குழல் வழி ஓசை எழுப்பல்
    - புகை எடுத்தல்
    - மணியடித்தல்
- கீழ்வரும் பட்டியலில் ஆழ்வார்களும் நாயன்மார்களும் இறைவனிடம் தூது அனுப்பிய பறவைகளில் இடம்பெறாத இரு பறவைகள் உள்ளன. கண்டறிந்து வட்டமிடுக.

    குயில், அன்றில், புறா, மயில், நாரை, மைனா, கிளி.
- மொழி தோன்றும் முன்பு செய்திகள் எவ்வாறு பரிமாறப்பட்டன?
- முற்காலத்தில் முரசறைந்து செய்தி அறிவிப்பவன் யார்? அதைப்பற்றி இரட்டைக் காப்பியங்கள் கூறும் செய்திகள் யாவை?
- பண்டைக்காலச் செய்திப் பரப்பாளர்கள் பற்றிக் கூறுக.
- தூது பற்றிச் சங்கப்பாடல்கள் குறிப்பிடும் செய்திகளைக் குறிப்பிடுக.

# 18. திரைக்கதையும் கற்பனையும்

இக்கட்டுரையின் ஆசிரியர் எம். சிவகுமார். திரைப்படத்துறையில் ஆழ்ந்த அனுபவம் பெற்றவர். பல்வேறு ஆய்வுக்கட்டுரைகளையும் நூல்களையும் படைத்துள்ளார். இவருடைய 'சினிமா ஓர் அற்புத மொழி' என்ற நூலிலிருந்து இக்கட்டுரை எடுக்கப்பட்டுள்ளது.

ரசிகர்கள் தன்னிடம்
என்ன எதிர்பார்க்கிறார்கள் என்பதை
திரைப்படம் எடுப்பவன்
அறிந்திருக்க வேண்டும்;
அதை அறிந்த பின்
அவர்கள் எதிர்பார்ப்பதற்கு மேலாகத்
தந்து
அவர்களை ஆச்சரியப்பட வைக்கவேண்டும்.



திரைக்கதை எழுத வாழ்க்கை அனுபவம் அவசியம். அனுபவத்தோடு இன்னொன்றும் தேவை. அது அதை விட முக்கியம். அதுதான் கற்பனைத்திறன். கற்பனை சக்தி மிகப்பெரிய ஆயுதம். ஞாபக சக்தியைப் போல் கற்பனை சக்தியையும் பயிற்சி மூலம் வளர்த்துக்கொள்ளலாம். அறிவியல்படி ஞாபக சக்தி மூளையின் ஒரு பாகத்தில் உள்ளது. ஆனால் கற்பனைத் திறன் மூளையின் எந்தப் பாகத்தில் உள்ளது என்று யாரும் சொல்லவில்லை. அது மூளை யில் மட்டுமா இருக்க முடியும்? உடலில், உடல் அசை வுகளில், உணர்வுகளில், நரம்புகளில் என்று எல்லா வற்றிலுமே கற்பனைத்திறன் இருக்கமுடியும். கற்பனை ஒருவரின் வயதைப் பொறுத்து அமைகிறது; தன்மை யைப் பொறுத்து அமைகிறது. கனவுகளை உருவாக் குவது கற்பனைதான். பகற் கனவுகளை உருவாக்கு வதும் கற்பனைதான். நம் வாழ்க்கை ஓட்டத்தை நிர் ணயிப்பது கற்பனை; வாழ்க்கையையே மாற்றுவது கற் பனை!

இந்தியாவில் கதை சொல்லும் மரபு பழமை யானது; எண்ணற்ற வகைகளைக் கொண்டது. கதை களில், கவிதைகளில், நாடகங்களில் அது வெளிப் பட்டது. ஆனாலும் பல நேரங்களில் நல்ல கதை என் றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று விதி கள் உருவாக்கப்பட்டன. அப்போது அங்கே கற்ப னைத் திறன் கட்டுப்படுத்தப்பட்டது. எழுத்தாளர்கள் ஏற்கனவே நிரூபிக்கப்பட்ட வழிமுறைகளை, விதி களைப் பின்பற்றினர். அது பாதுகாப்பானது எனக் கருதினர். விளைவு, ஒரே மாதிரியான படைப்புகள்!

சினிமாவுக்கும் இது நேர்ந்தது. ஏராளமான படங்கள் வெளிவருகின்றன; சினிமா என்பது அபூர்வமாகவே வருகிறது. புதிதாய்ச் சொல்ல வேண் டும் என்ற உணர்வு மறைந்து வருகிறது. ஒரு குறிப்பிட்ட படம் வெற்றி பெற்றால், அதே போல் பல படங்கள்! ஒரு குறிப்பிட்ட கதைப்போக்கு வரவேற்புப் பெற்றால், வரிசையாய் அதே மாதிரி கதைப் போக்கு கள்! இதற்கு அவர்கள் சொல்லும் ஒரே காரணம் 'நம் பகமானது'; 'நிரூபிக்கப்பட்டது'. இப்படி வெற்றி பெற்ற ஒரு படத்தைப் பின்பற்றி வரும் பல படங்கள் குறைந்தபட்ச வெற்றிகூட பெறுவதில்லை. அங்கே அவர்கள் கற்பனையை முற்றிலும் நிராகரிக்கிறார்கள். கற்பனையில்லாததால் அவர்களின் கருப்பொருள் வறட்சியாய் உள்ளது. திரைக்கதையாசிரியர்கள் கற் பனைக்குக் கதவை சாத்தியபோதுதான் ஃபார்முலா படங்கள் ஒரு போக்காக மாறியன. இவர்களுக்கு வெற்றி குறித்து எப்போதும் பயம்! வழக்கத்தை மீற வேண்டாம் என்று தீர்மானித்தவர்கள். குண்டுச்சட்டி

யில் குதிரை ஓட்டுபவர்கள்! வாழ்க்கையை, சிந்த னையை குறுக்கிட்டுக் கொண்டவர்கள்! அனுபவம் மட்டும் போதும் என்ற போக்கு மற்ற துறைகளைப் போலவே சினிமாவையும் பாதித்தது. ஆனால் சினி மாவுக்கு அனுபவம் மட்டும் போதாது; கற்பனை கொண்டு அனுபவத்தோடு ஒவ்வொரு முறையும் மோத வேண்டும். இயக்குநர்கள் எல்லாப் படங்களை யுமே தங்கள் முதல் படம்போல் அணுக வேண்டும்.

ஹிட்ச்காக், புனுவல் போன்ற இயக்குநர்கள் தினமும் பத்திரிகை படிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர். அது அவர்களின் திரைக்கதை பற்றிய கற்பனைக்கு உதவியாக இருந்ததாகச் சொல்கின்றனர். குறிப்பிட்ட கொலை கொள்ளை பற்றிய செய்தியைப் படித்ததும், அதை அடிப் படையாய்க் கொண்டு திரைக்கதை அமைக்க முயல் வர். அடுத்த நாள் அதுபற்றிச் செய்தி ஏதும் இருக்காது. அவர்களும் அதை மறந்து விடுவர். கற்பனைக்கு உந் துதலாக ஒவ்வொருவருக்கும் ஒரு விஷயம் அமை கிறது. சிலருக்கு அமைதியாய் வெளியுலக தொடர்பே இல்லாத சூழ்நிலையில்தான் எழுதவரும் என்கிறார் கள். பெர்க்மென் தன் பல திரைக்கதைகளை அமை தியான சூழ்நிலையில் தனிமையில் எழுதியதாகச் சொல்கிறார்; திரைக்கதையாசிரியர் ழான் க்ளோத் காரியேர் தன் பல திரைக்கதைகளை மனிதர்கள் நிறைந்த, உயிரோட்டமான, சப்தங்கள் நிறைந்த சூழ லில் எழுதியதாகச் சொல்கிறார். அவர் பீட்டர் புருக் கிற்காக மகாபாரதம் திரைக்கதை எழுதியபோது அதன் சில பகுதிகளைச் சென்னை நகரின் போக்கு வரத்து நெரிசலிலும், உள்ளூர் விமான நிலையங்க ளில் விமானத்திற்காக காத்திருந்தபோதும் எழுதிய தாகச் சொல்கிறார். நம் ஊரில் சினிமா எடுப்பதென் றால் முதலில் செய்வது திரைக்கதையை எழுதவும், விவாதிக்கவும் ஓட்டலில் அறை எடுப்பதுதான். கற் பனை என்பது கனவு காண்பது. அதற்கு ஒவ்வொரு வருக்கும் ஒரு சூழல் தேவைப்படுகிறது. கனவுகள் தான் கற்பனையை உழுகிறது. சில நேரங்களில் நாள் கணக்கில், மாதக்கணக்கில், வருடக்கணக்கில் ஒரு கதையோ, நிகழ்ச்சியோ நம் மனதில் இருக்கும். அதைக் கற்பனைக் கனவுகொண்டு உழுது கொண் டிருப்போம். பின்னொரு நாளில் அது பலன்தரலாம். ஆனால் கற்பனை, கனவுகளை நிறுத்தக்கூடாது. கனவு இல்லையெனில் அடிப்படைப் படைப்புத்தி றனே போய்விடுகிறது. ஒரு பெரிய எழுத்தாளர், ஒரு வனைத் திட்டியபொழுது ‘அவன் மிக மோச மானவன். கனவுகளே காணாதவன்’ என்றார்.

திரைப்படம் எடுக்கப்பட்டு முடிந்தவுடன் திரைக்கதை மறைந்து போகிறது. படம் பார்க்கும் ரசிகர்களின் கவனமோ படத்தின் மீதுதான். அப்ப டம் எப்படி எடுக்கப்பட்டது என்பதன் மீதல்ல. அப்படம் உருவாக பலர் பல வேலைகளைச் செய்த னர். ஆனால் அவை அனைத்தும் ஜீரணிக்கப்பட்டு, எல்லோரும் மறைந்து வெறும் படம்தான் நம் கண் களுக்குத் தெரிகிறது. இப்போது படத்தைப் பார்க்கும் போது நமக்கு ஆச்சரியமாய் உள்ளது. அதன் காட் சிகள், வார்த்தைகள் எல்லாம் எதிர்பாராத உணர்வை, மகிழ்ச்சியைத் தருகின்றன. அத்தனை பேரின் உழைப் பும், கற்பனையும் கனவும் இதற்குத்தானா என்று முடிக்கப்பட்ட படத்தை முதன்முதலாகப் பார்க்கும் போது உணர்கிறோம்.

முடிக்கப்பட்ட படத்தில் இதுபோன்ற ஆச்சரிய உணர்வைப் பெற வேண்டுமானால், நாம் அனுபவத் தில் கஷ்டப்பட்டுக் கற்றுக்கொண்ட தொழில் நுட்பங் கள் அதில் குறுக்கிடாமல் பார்த்துக்கொள்ளவேண் டும். படாடோபமான தொழில்நுட்ப வித்தைகள் பார் வையாளனுக்கும் படத்துக்கும் இடையே உள்ள நெருக்கமான பிணைப்பை அறுத்துவிடும்.

திரைக்கதை சினிமாவின் கனவு நிலை மாத் திரம் அல்ல, சினிமாவின் குழந்தைப் பருவமும்கூட. இது படிப்படியாய் தவழ்ந்து, நடந்து தனது பலத்தை, பலவீனங்களை உணர்கின்றபோதுதான் அது சினிமாவாய் பிறக்கத் தயாராகிறது. சினிமாவுக்கு வய தாவதும் உண்டு; மரணமும் உண்டு. ஒரு படத்தை இனி பார்ப்பதில் நமக்கு எந்த ஆர்வமும் இல்லை எனும்பொழுது, நம் நினைவாற்றலும் அதை ஒதுக்கி விடும்பொழுது அப்படம் இல்லாமல் போய்விடுகிறது.

1930கள் முதல் 1950கள் வரை சினிமாவில் திரைக்கதையாசிரியர்கள் ஆதிக்கம் செலுத்தினார் கள். குறிப்பாக ஹாலிவுட்டிலும், ஐரோப்பிய சினிமா விலும் இது அதிகமாக இருந்தது. இயக்குநர்களின் வேலை என்பது தொழில்நுட்பங்களின் துணை

கொண்டு கதையைப் படமாக்குவதுதான். ஹாலிவுட்டில் அப்போது படத்தொகுப்பில்கூட இயக்குநர்கள் பங்குபெற முடியாது. படப்பிடிப்பு முடிந்த கையோடு இயக்குநர்களின் வேலை முடிந்துவிடும்.

1950களில்தான் இப்போக்கு மாறத் தொடங்கியது. 1950களின் தொடக்கத்தில் இத்தாலியில் நியோ ரியலிஸம் (Neo Realism) தொடங்கியது. 1950களின் இறுதியில் பிரான்சில் நியுவேவ் இயக்கம் தொடங்கியது. அதுபோல் பல நாடுகளில் புதிய வகை சினிமா வரத்துவங்கியது. அடிப்படையில் ஒவ்வொரு திரைப்படமும் அப்படத்தின் இயக்குநரின் தனி முத்திரையைக் கொண்டிருக்க வேண்டும் என்ற எண்ணம் நிலவியது. இயக்குநர்தான் படத்தின் ஒரே படைப்பாளி என்று நம்பப்பட்டது. இதனால் அப்போது சினிமாவில் புதிய போக்குகளும், தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதில் புதிய முறையும் தோன்றியது.

சினிமாவில் எதிர்பார்க்கப்பட்டதெல்லாம் கதை, கதை மட்டும்தான். கதை சொல்லுங்கள்; நல்ல கதை சொல்லுங்கள்; விறுவிறுப்பான கதை சொல்லுங்கள்; புது மாதிரியான கதை சொல்லுங்கள்; மனதைக் கட்டிப்போடும் கதை சொல்லுங்கள்; மறக்கமுடியாத கதை சொல்லுங்கள்; வாழ்க்கையோடு தொடர்புபடுத்த முடிந்த கதையைச் சொல்லுங்கள்; சோகம் அதிகமில்லாத கதையைச் சொல்லுங்கள்; முடிந்தால் சந்தோஷமான கதையை மட்டுமே சொல்லுங்கள் என்று ரசிகர்கள் கூக்குரலிட்டனர். அப்போது மீண்டும் கதைக்கும், திரைக்கதைக்கும் முக்கியத்துவம் தரப்பட்டது. திரைக்கதை சினிமாவின் முதுகெலும்பு என்பது மீண்டும் உணரப்பட்டது. உலகமெங்கும் புதிய சினிமா இயக்கங்கள் மெல்ல மறையத் துவங்கின.

எழுபதுகளின் துவக்கத்தில் இந்தியாவிலும் இதுபோன்ற புதிய சினிமாக்கள் இருந்தன. இடைப்பட்ட சினிமா என்று ஷியாம் பெனகல் போன்றவர்களும், இயக்குநர்களின் சினிமா என்று மணி கவுல், குமார் சஹானி, அடூர் கோபாலகிருஷ்ணன் போன்றவர்களும் படங்களை எடுத்தனர். குறிப்பாக கர்நாடகத்தில் கராந்த், கர்னாட், காஸ்ரவல்லி பட்டாபிராம ரெட்டி என்று பல இயக்குநர்கள் புதிய சினிமாவின் பாகமாகத் தங்கள் படங்களை எடுத்தனர். ஆனால் எழுபதுகள் முடிவதற்குள் இவை மறைந்துபோயின. காரணம் ஒன்று மக்கள் அப்படங்களை நிராகரித்தனர். இன்னொன்று டெலிவிஷன் இந்தியாவில் மெல்ல வளரத்தொடங்கியது.

ஒரு படத்திற்குத் திரைக்கதையாசிரியரும், இயக்குநரும் வேறு வேறாக இருக்கும்பொழுது, அவர்களிடையே இருக்கும் நெருக்கமான உணர்வில் யார் பெரியவர் என்ற எண்ணம் இருக்கக் கூடாது. ‘கடைசியில் நான் சொன்னதைத்தான் இயக்குநர் ஏற்றுக்கொண்டார்’, ‘அவர் எழுதியதை சினிமாவுக் கேற்றபடி மாற்றியது நான்தான்’ என்பவை போன்ற சின்னச் சின்ன பெருமிதங்கள் அர்த்தமற்றவை. அது சில சமயங்களில் திரைப்படத்தின் வெற்றிக்கே ஊறு விளைவிக்கும்.

‘நாம் நினைப்பதுதான் சரி. நம் ரசனைதான் மிகச்சிறந்தது’ என்ற எண்ணம் மனிதனுக்குள்ளே ஊறிப்போன ஒன்று. அதை எப்படி வெற்றி கொள்வது? இந்த உணர்வுகளை மீறி நம் வேலைகளை மாத்திரம் எப்படிச் செய்வது? சற்று கடினமான காரியம்தான். ஒவ்வொரு திரைக்கதையாசிரியருக்கும் இயக்குநருக்கும் மனத்திரையில் படம் ஓடும். அதை ரசிகர்களும் பார்ப்பார்கள். இவர்கள் தாங்களே படைப்பாளிகளாகவும், ரசிகர்களாகவும் ஒவ்வொரு காட்சியையும் தங்கள் மனத்திரையில் ஓட்டிப் பார்ப்பார்கள். இது ஒருவிதப் போராட்டம். படைப்புக் கலைஞர்கள் எல்லோருக்குமே இப்போராட்டம் இருக்கும். சில இயக்குநர்கள், கதாசிரியர்கள் ஒரு புதிய கருத்து அல்லது காட்சி மனதில் தோன்றிய உடனே அது குறித்து பெருமகிழ்ச்சியடைவர். ஆஹா, ஓஹோ என்று அவர்களே நினைத்துக்கொள்வர். சில இயக்குநர், கதாசிரியர்களுக்கோ அவர்கள் மனதில் தோன்றும் எந்தக் கருத்தும் காட்சியும் திருப்தி தராது. இந்த இரு போக்குகளுமே ஆபத்தானவையாகும்.

சில சமயங்களில் திரைக்கதையாசிரியர் தான் எழுதிய சிலவற்றிற்கு அவராலேயே காரணம் சொல்ல முடியாது. விக்டர் ஹியுகோ சொல்வதுபோல் “படைப்பாளி என்பவன் இருளின் வாய் போன்றவன்”. அவன் மூலம் வார்த்தைகள் வந்து விழுகின்றன. பல

நேரங்களில் அவர்களின் கட்டுப்பாட்டை மீறி இவ்வார்த்தைகள் வந்துவிழும். அவனுள் இருக்கும் புதைகுழி ஆழமானதாக இருக்கும். அப்புதைகுழியில் உள்ளவற்றை மற்றவர்களுடன் அவர்கள் பகிர்ந்து கொள்ள விரும்புகிறார்கள். இதையே செக்காவ் வேறுவிதமாக இன்னும் அழகாகச் சொல்கிறார். “கதாபாத்திரத்தின் மனோநிலையை விளக்கமாய் சொல்வதைத் தவிர்ப்பது நல்லது. மாறாக மனோநிலையை கதாபாத்திரத்தின் செயல்கள் மூலம் காட்ட வேண்டும்.”

ஷேக்ஸ்பியரைப் பற்றி நமக்கு ஒன்றுமே தெரியாது. ஆனால் அவரின் படைப்புகள் மூலம் எல்லாமே தெரிகிறது. தன்னிகரற்ற எழுத்தாளன் எப்போதுமே தன்னைத் தன் கதாபாத்திரங்களினூடே மறைத்துக் கொள்கிறான். அதன் பலனாகக் கதாபாத்திரங்கள் அனைத்து வகை உணர்வுகளையும் வெளிக்காட்டுகின்றன. அவன் குரல் எல்லோருக்கும் கேட்கிறது.

தினசரி நாம் காணும் வாழ்க்கை குழப்பமானது; முறையற்றது. சாலையில் செல்லும்பொழுது நாம் காணும் முகங்கள் நாம் அறியாதவை. அவர்கள் பேசுவது நம்மைப் பாதிப்பதில்லை. அவர்களின் குரல் நம் காதுகளை எட்டுவதில்லை. ஆனால் திரைக்கதை எழுதும்பொழுது நாம் காணும் இந்தக் குழப்பமான, முறையற்ற செயல்களைத் தெளிவாகவும் முறைப்படுத்தியும் பார்க்கிறோம். தேவை என நாம் கருதும் காட்சிகளை, சப்தங்களை, வார்த்தைகளை நாம் தேர்வு செய்கிறோம். அவற்றை முறைப்படுத்துகிறோம். அதன் மூலம் நிலவும் யதார்த்தத்தை மீறுகிறோம்; புதிய யதார்த்தத்தை உருவாக்குகிறோம். உண்மையில் இந்த முறைப்படுத்துதல் இறுதியாகப் படத்தொகுப்பின் போதுதான் நிகழ்கிறது. ஆனாலும் அது திரைக்கதை எழுதும்போதே தொடங்கிவிடுகிறது.

புத்தகமாகட்டும், சினிமாவாகட்டும் மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள அவற்றில் ஏதும் இல்லாத போது அவற்றால் நிலைக்க முடிவதில்லை. திரைக்கதையாசிரியர் செய்வதெல்லாம் மற்றவர்களோடு உணர்வைப் பகிர்ந்துகொள்வதுதான். அடிப்படையில் அவனும் கதை சொல்லிதான். ஆனால் நவீன உபகரணங்கள் அவனுக்குத் துணையாய் நிற்கின்றன. நம் இதிகாசங்கள் சொல்வதெல்லாம் கதைகள்தான். கதைகள் கேட்பது அவசியம்; சமயங்களில் அவை நம்மை மேன்மைப்படுத்துகின்றன.

மண்ணைத் துளைத்து வளமாக்கும் மண்புழுக்கள் போல் கதைசொல்லிகள் காலம் காலமாய் கதையை ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு எடுத்துச் சொல்லி சமூகத்தை மேம்படுத்துகிறார்கள்.

– எம். சிவகுமார்

**விடை காண்போம்**

- ஒரே மாதிரியான படைப்புகள் எழுவதற்கான காரணம் யாது?
- குறைந்த விகித வெற்றி கூட பல திரைப்படங்கள் பெறாதது ஏன்?
- ‘அவன் மிக மோசமானவன் கனவுகளே காணாதவன்’ என்று பெரிய எழுத்தாளர் கூறுவது ஏன்?
- திரைக்கதை சினிமாவின் முதுகெலும்பு என்று உணரப்பட்டது எப்பொழுது?
- புதுமை நோக்குடன் திரைப்படம் இயக்கிய சில இயக்குநர்களின் பெயர்களை எழுது?
- ‘இது ஒரு விதப் போராட்டம், படைப்புக் கலைஞர்கள் எல்லோருக்குமே இப்போராட்டம் இருக்கும்’இக்கட்டுரையில் போராட்டமாகக் காட்டப்படுவது எது?
- ‘இந்த இரு போக்குகளுமே ஆபத்தானவை’ கட்டுரையில் கூறப்படும் இரு போக்குகளும் ஆபத்தும் யாவை?
- படைப்பாளி குறித்து விக்டர் ஹியூகொ செக்காவ் கூறும் கருத்து என்ன?
- தன்னிகரற்ற எழுத்தாளன் குறித்து எம். சிவகுமார் கூறுவது என்ன?
- ‘மண்ணைத் துளைத்து வளமாக்கும் மண்புழு மாண்பு’ எதற்கு ஒப்புமையாகக் கட்டுரை ஆசிரியர் காட்டுகிறார்?
- ‘திரைக்கதை’ – குறித்து சினிமா ஓர் அற்புத மொழி என்ற கட்டுரையில் தரப்படும் கருத்துக்களை ஒன்றரைப் பக்க அளவில் எழுதுக.

## கற்றல் செயல்பாடுகள்

### ❖ விளக்கம் காண்போம்

- திருமுகம்
- முடங்கல்
- திருமுகப்பாசுரம்
- சீட்டுக்கவி

### ❖ ஏற்றபடி இணைத்து எழுதுவோம்

- ஜாண் குட்டன் பார்க் - சினிமாட்டோகிராபி
- தாமசு ஆல்வா எடிசன்- தொலைக்காட்சி
- லூமியர் சகோதரர்கள் - சலனப்படக்கருவி
- மார்க்கோணி - அச்சுப்பொறி
- ஜாண்லோகிபெயர்டு - வானொலி

### ❖ கற்பனை செய்வோம்

- எதிர்காலத்தில் தகவல் தொடர்பியல் எவ்வாறு அமையக்கூடும் என்பதைக் கற்பனை செய்து கலந்துரையாடுங்கள். கருத்துகளைத் தொகுத்துக் கட்டுரையாக்குங்கள்.

### ❖ பட்டி மன்றம் நடத்துவோம்

- எது சிறந்த வாழ்வு?
  இயற்கையோடுஇயைந்த வாழ்வா?
  இணையத்தோடு இயைந்த வாழ்வா?

### ❖ திரட்டுவோம்

- தகவல் தொடர்பியல் தொடர்பான இதழ்கள், நூல்களின் பெயர்களைத் திரட்டலாமல்லவா?
  ‘இன்டர்னெட் உலகம்’ (இதழ்)

### ❖ இணைத்து எழுதுவோம்

மாதிரி : வயிறு+பசி - வயிற்றுப்பசி
கயிறு+பாலம் -
ஆறு+மணல் -
நாடு+பற்று -
காடு+மலர் -
கூடு+வாழ்க்கை -

### ❖ வகைப்படுத்துவோம்

செய்தித்தாள், தொலைக்காட்சி போன்ற ஊடகங்களில் வரும் செய்திகளைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்திக் காணலாம்.

- அரசியல்
- நிகழ்வுகள்
- வணிகம்
- விளையாட்டு
- பொழுது போக்கு

### ❖ குறிப்பு எழுதுவோம்

| கருவிகள் | குறிப்புகள் |
|---|---|
| அரிப்பறை | நெல் அறுவடையின் போது முழக்கப்படும். |
| ஏறுகோட்பறை | |
| தண்ணுமை | |
| பன்றிப்பறை | |
| பேரிகை | |

### ❖ வணிக விளம்பரங்கள் தயாரிப்போம்

- செய்தித்தாளில் வருகின்ற சில வணிக விளம்பரங்களைச் சேகரிப்போம். அவற்றின் அடிப்படையில் புதிய விளம்பரங்கள் தயாரிக்கலாம்.

### ❖ சொந்த நடையில் எழுதுவோம்

பின்வரும் தலைப்புகளில் சிறு கட்டுரைகள் எழுதலாமல்லவா?

- முற்காலத் தகவல் தொடர்புச் சாதனங்கள்
- தற்காலத் தகவல்தொடர்பு வசதிகள்

### ❖ பத்திரிகைச்செய்தி

**தின ஒளி**




**உணவுப்பொருட்களில் பூச்சிக்கொல்லி மருந்து!**
**திடுக்கிடும் செய்தி**

**கோட்டயம், செப் 10** – விவசாயத்துறை அமைச்சரை விவசாய சங்கத் தலைவர் சந்தித்தார். என்டோ சல் பான் எனும் பூச்சிக்கொல்லி மருந்தின் நச்சுத்தன்மை பற்றி அமைச்சர் விளக்கினார். இம்மருந்தால் அந்தச் சுற்றுப் புறத்தில் வாழும் மக்களின் உடல்நலம் பாதிக்கப்படுகிறது. இயற்கைப் பாதுகாவலர் பெரியாழ்வார் அரசாங்கக் கவனத்தை ஈர்த்தார். அவருக்கு மக்கள் சார்பில் நன்றி கூறினார் அமைச்சர்.

### ❖ வானொலிச் செய்தி :



திருவனந்தபுரம் வானொலி நிலையம். செய்திகள் வாசிப்பவர் பொன்முடி ராசேந்திரன். தலைப்புச் செய்திகள். உணவுப்பொருள்களில் பூச்சி மருந்தின் நச்சுக் கலப்பு.... வங்காள விரிகுடாவில் குறைந்த காற்ற

முத்த மண்டலம்.....

செவ்வாய்க் கிரகத்தில் உயிரி னங்கள் பற்றி விஞ்ஞானிகள் புதிய முடிவு.

உணவுப்பொருள்களில் பூச்சிக்கொல்லி மருந்தின் நச்சுக் கலப்பால் உயிரினங்களுக்குக் கேடு விளை யும் என்றார் விவசாயத்துறை அமைச்சர். விஞ்ஞா னிகளின் ஆராய்ச்சியில் இது உண்மை எனத் தெரிய வந்துள்ளது என்றார். அம்மருந்துகள் தடைசெய்யப் படுமா என்ற கேள்விக்கு, பொதுமக்களைப் பாதிக் கும் எந்தப் பொருளையும் அனுமதிக்கமாட்டோம் என்றார்.

❖ **தொலைக்காட்சிச் செய்தி**

(தொலைக்காட்சியில் செய்தி நேரம். செய்தி வாசிப்பவர் உருவம்)

வணக்கம். திருவனந்தபுரம் தொலைக்காட்சி நிலையம்.



இன்றைய முக்கிய செய்திகள். பூச்சிக்கொல்லி மருந்துகள் விளை பொருள்களில் கலப்பதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றி அமைச்சர் உரையாற்றும் போது.... (தி ரையில் அமைச்சர் மேடையில் நின்று உரையாடும் காட்சி) 'மக்களைப் பாதிக்கும் எந்த மருந்தையும் அரசாங்கம் அனுமதிக்காது'.

❖ **செய்தியாக்குவோம்**

மாணவர்கள் அனைவருக்கும் கணினிக் கல் வியை நடைமுறைப்படுத்த அரசு முடிவெடுத்துள் ளது. இது பற்றிக் கல்வி அமைச்சர் உரையாற்றி னார். பொது மக்களும் கணினியைக் கற்று வலைத் தளங்களைப் பயன்படுத்தப் பயிற்சி கொடுக்கப்படும்.

இந்தச் செய்தியை மூன்று தகவல் தொடர்புச் சாதனச் செய்திகளாக மாற்றுவோம்.

❖ **கலந்துரையாடுவோம்**

- குழுவாகப் பிரிந்து கலந்துரையாடுவோம்

❖ **உரையாடல் தலைப்புகள்**

- தற்போது திரையரங்குகளில் வெற்றி முழக்க மிடும் திரைப்படங்களின் கதைகள்.
- தற்போது விறுவிறுப்பாக ஒளிபரப்பாகும் தொலைக்காட்சி தொடர்களின் கதைபோக்கு.
- பத்திரிகை / தொலைக்காட்சியில் படித்த / பார்த்த செய்திகள், கலை நிகழ்ச்சிகள் வெளி நாட்டுத் தகவல்கள்
- திரைப்படப் படப்பிடிப்பு பார்த்த அனுபவம்
- தொலைக்காட்சி/வானொலி/பத்திரிகைகளில் பிடித்த விளம்பரங்கள்
- பார்த்த திரைப்படத்தின் நகைச்சுவைக் காட்சிகள்

❖ **பட்டிமன்றம் நடத்துவோம்**

பொருள் : திரைப்படங்கள் சமூகவளர்ச்சிக்குக் காரணமாகின்றன. சமூக சீர்கேட்டிற்குக் காரண மாகின்றன.

❖ **நேர்காண்போம்**

தங்கள் பகுதியிலுள்ள நடிகர்/ கலைஞர்/ எழுத்தாளர் ஒருவரைத் தொலைக்காட்சிக்காக நேர்காணல் நடத்த உள்ளோம். குழுவாகப் பிரிந்து பேட்டி காண்பதற்குதவும் வினாக்களைத் தயார் செய்வோம். பிறகு நேர்காணல் நடத்துக.

❖ **மெட்டுக்கு ஏற்ற பாடல் எழுதுவோம்**

- மிகவும் பிடித்த திரைப்பாடல் (தமிழ்/மலையா ளம்/இந்தி) மெட்டுக்கு ஏற்பப் புதிய பாடல் ஒன்று சொந்தமாக எழுதுக.
- பிடித்த நாடகம்/ திரைப்படம்/ வசனங்களை பாவத்தோடு இலக்கியமன்றத்தில் பேசுங்கள்.
- ஒரு சிறுகதையை வாசித்துத் தொலைக்காட்சித் தொடருக்கு ஏற்ப காட்சியமைப்பு எழுதுக.

❖ **கணினியில் பதிவு செய்வோம்.**

- வட்டார விழா ஒன்று குறித்து அனைத்து தக வல்களையும் (புகைப்படங்கள், கலைநிகழ்ச்சிகள், வரலாற்றுச் செய்திகள்) சேகரித்துப் பள்ளிக் கணினியின் நினைவில் (Memory) பதிவு (File) செய்து வைக்கவும்.

❖ **வினாடி வினா நிகழ்த்துவோம்**

பாடக் கட்டுரையைப் படித்து ஒரு சொல்லில் விடை தரும் சிறு வினாக்களை எழுதுவோம்.

மாதிரி

வினா : கதைக்கு விதிகள் உருவான பொழுது கட்டுப்படுத்தப்பட்ட கூறு எது?

விடை : கற்பனைத்திறன்

❖ **எனது குறிப்பேடு**

- ‘ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?’ - இதுபோன்று ‘எண்’ இடம்பெறும் பழமொழி களைத்திரட்டி எழுதுக.
- இந்திய நாட்டு பழங்கதைகள் சிலவற்றைத் திரட்டி வாசியுங்கள்.
- விக்ரமாதித்தன் கதைகள்
- தெனாலி ராமன் கதைகள்

❖ **எனது நூலகக் குறிப்பேடு**

- பத்திரிகையில் வெளிவரும் திரைப்பட விமர் சனங்களைத் திரட்டி வாசியுங்கள்.
- பார்த்த படம் ஒன்றிற்கு விமர்சனம் எழுதுக.

❖ **எனது படைப்பாற்றல் ஏடு**

- தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் தொடர்/ நிகழ்ச்சி பற்றி எழுதுக.
- வாரப் பத்திரிகையில் படித்த தொடர் கதை பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

❖ **படத்தொகுப்பு**

- திரைப்பட இயக்குநர்களின் படத்தை ஒட்டி அவர்களின் பெயரையும் படத் தொகுப்பில் எழுதுங்கள்.

**வாசித்துக் கருத்தறிவோம்**

உலகில் குழுவாக வாழும் உயிரினங்கள் தங் களுக்குள் தகவல் தொடர்பு கொள்கின்றன. ஒரே கூட்டில் அல்லது குழுவில் வாழும் உயிரினங்கள் தங்களுக்குள் பணிகளைப் பகிர்ந்து கொண்டு ஒவ் வொரு வகையான பணிகளைச் செய்கின்றன. கூட்டாக வாழ்வதற்கும், பணிகளைப் பகிர்ந்து கொள்ளவும், இணைந்து செயல்படவும் அவை தொடர்பு கொள்கின்றன.

பறவைகளின் கூட்டின் அமைப்பும் கூடு கட்டும் இடமும் பலவகைச் செய்திகளைத் தெரிவிக்கின்றன. பறவைகள் தங்களுக்குள் பேசிக் கொள்ளும் என்று அரிஸ்டாட்டில் கூறியுள்ளார்.

கோழிகள் உணவைக் கொத்தும் முறையைத் தம் குஞ்சுகளுக்குக் கற்றுக் கொடுக்கின்றன. அவை அலகைக் கொண்டு கொத்தும் முறையி னால் பல செய்திகளைத் தம் இனத்திற்கு அறிவிக் கின்றன. கொத்தும் போது தோன்றும் உடலசை வு, குரலொலி, தொடர்ச்சியாகக் கொத்துதல் போன்றவற்றின் மூலம் தமது கருத்தைத் தெரிவிக் கின்றன.

**விடை காண்போம்**

- உயிரினங்கள் எதற்காகத் தொடர்பு கொள் கின்றன?
- அரிஸ்டாட்டில் கூறியது யாது?
- கோழிகள் எவ்வாறு தம் கருத்துகளைப் பரிமாறிக் கொள்கின்றன?

மௌனப் படங்கள் காட்டப்பட்டபோது அதை விளக்கத் திரையின் பக்கத்தில் ‘கதை விவ ரிப்பாளன்’ இருப்பான். பின்னர் மேலும் விறு விறுப்பு கூட்ட கதை விவரிப்பாளனோடு கூடவே ஒரு இசைக் குழுவும் இருந்தது. காட்சியின் ஓட் டத்தை, விறுவிறுப்பைக் கூட்டும் வகையில் இக்குழு கூடவே இசையை வாசித்தது.

தென்னிந்தியாவில் தயாரிக்கப்பட்ட மௌனப் படங்களுள் ஒன்றே ஒன்றுதான் தற்போது உள்ளது அப்படம் ‘மார்த்தாண்டவர்மா’. நாகர்கோ விலில் ஒரு கம்பெனி தயாரித்த மலையாளப்படம் இது.. இப்படப்பிரதி பூனாவிலுள்ள திரைப்பட ஆவணப் பாதுகாப்பகத்தில் உள்ளது. இது 15 ஆண்டுகளுக்கு முன்பு சென்னையில் இந்திய சினிமா பற்றிய வகுப்பில் விஷேசமாக திரையிடப் பட்டது. இப்படம் வெளியானபோது, அதற்கு நேரடியாக இசை அமைத்த குழுவில் இருந்த ஒருவர் அப்போது சென்னையிலேயே வசித்து வந்தார். அவர் படம் வெளியானபோது வாசித்த அதே இசையைச் சென்னையில் திரையிடப்பட்ட போது மீண்டும் வாசித்தார். நேரடி இசை வாசிப் போடு மௌனப்படத்தைப் பார்த்த அனுபவம் புதிதாக இருந்தது.

**விடை காண்போம்**

- கதை விவரிப்பாளன் வேலை என்ன?
- திரைப்பட ஆவணப் பாதுகாப்பகம் எங்குள்ளது?

## இலக்கண விளக்கம் பெறுவோம்

### தன்வினை பிறவினைகள்

கண்ணன் வந்தான்.

கண்ணன் அண்ணனை வருவித்தான்.

இவற்றுள், வந்தான் என்பது கருத்தா தானே செய்த தொழிலை உணர்த்துகின்றது. வருவித்தான் என்பது கருத்தா பிறரைக்கொண்டு செய்வித்த தொழிலை உணர்த்துகிறது.

கருத்தா தானே செய்யும் வினை, தன்வினை எனப்படும். கருத்தா பிறரைக்கொண்டு செய்விக்கும் வினை, பிறவினை எனப்படும்.

| **தன்வினை** | **பிறவினை** | **சேர்ந்த விகுதி** |
|---|---|---|
| செய் | செய்வி | வி |
| நட | நடப்பி | பி |
| போ | போக்கு | கு |
| உருள் | உருட்டு | டு |
| பாய் | பாய்ச்சு | சு |
| இரு | இருத்து | து |
| எழு | எழுப்பு | பு |
| துயில் | துயிற்று | று |

தன்வினை பிறவினையாகும்போது, வி, பி, கு, சு, டு, து, பு, று என்பன விகுதிகளாகச் சேர்ந்து வருகின்றன. இவை பிறவினை விகுதிகள் எனப்படும்.

செய்வி, செய்வித்தான் – வினைமுற்று

நடப்பி, நடப்பித்த – பெயரெச்சம்

போக்கு, போக்கி – வினையெச்சம்

பாய்ச்சு, பாய்ச்சுதல் – தொழிற்பெயர்.

உருட்டு, உருட்டினான் – வினையாலணையும் பெயர்

வி, பி, கு, சு, டு, து, பு, று என்னும் விகுதிகள் சேர்ந்த பிறவினைகள் பகுதிகளாய் நிற்க, அவற்றினின்றும் வினைமுற்று, பெயரெச்சம், வினை யெச்சம், தொழிற்பெயர், விணையாலணையும் பெயர் என்பவை பிறக்கும்.

| **தன்வினை** | **பிறவினை** |
|---|---|
| விளங்கு | விளக்கு |
| கலங்கு | கலக்கு |
| சுருங்கு | சுருக்கு |
| திரும்பு | திருப்பு |
| முழங்கு | முழக்கு |
| தேய்ந்தான் | தேய்த்தான் |
| அழிந்தான் | அழித்தான் |
| ஒழிந்தான் | ஒழித்தான் |

இவ்வாறு, சில தன்வினைகளில் உள்ள மெல் லொற்று வல்லொற்றாகத் திரிந்து பிறவினையாகும்.

| தன்வினை | பிறவினை |
|---|---|
| உருகு | உருக்கு |
| பெருகு | பெருக்கு |
| ஓடு | ஓட்டு |
| மாறு | மாற்று |
| தேறு | தேற்று |
| ஆடு | ஆட்டு |

இவ்வாறு, சில தன்வினைகள் வல்லெழுத்து இரட்டித்துப் பிறவினைகளாகும்.

வெளுத்தான் – தான் (நோயால்) நிறம் வெளுத் தான் என்னும் பொருளில் தன்வினை. துணியை வெளுக்கச் செய்தான் என்னும் பொருளில் பிறவினை.

சில வினைகள், தன் வினைக்கும் பிறவினைக் கும் பொதுவாக வரும். பொருளாலே அவை தன்வினையா பிற வினையா என்பது அறி யப்படும்.

### வழாநிலை

நான் நாளை வருவேன்.

நான் என்பது தன்மை ஒருமைப் பெயர்; ‘நாளை‘ என்பது எதிர்காலம் காட்டும். இவைகளுக்கு ஏற்ற வினைமுற்று ‘வருவேன்’ என்பது. இவ்வாறு இலக் கணமுறை வழுவாமல் பேசுவதும் எழுதுவதும் வழா நிலை எனப்படும்.

இலக்கணம் : இலக்கணப் பிழை இன்றிப் பேசுவதும் எழுவதும் வழாநிலை எனப்படும்.

(எ.டு) குயில் கூவும். நாய் குரைக்கும்.

### வழு

நான் நாளை வந்தேன்.

‘நாளை‘ என்னும் எதிர்காலத்தைக் குறிக்கும் சொல் லோடு வந்தேன் என்னுல இறந்தகால வினைமுற் றைச் சேர்த்துக் கூறுவது இலக்கணப் பிழையாகும். இவ்வாறு பேசுவதும் எழுதுவதும் வழு எனப்படும்.

இலக்கணம் : இலக்கண முறைக்கு மாறாகப் பேசுவதும் எழுதுவதும் வழு எனப்படும். (வழு- குற்றம்)
எ.டு. பால் தருவது காளையா? பசுவா? (இது வழுவாக வந்துள்ள வினா).

**வழுவமைதி**

(வழு- குற்றம்; அமைதி - ஏற்றுக் கொள்ளுதல்)

உணவு உண்டு கொண்டிருக்கின்றவனை, அவன் நண்பன் அழைக்கும்பொழுது, 'உணவு உண்டேன் வந்தேன்' எனக் கூறுவது வழு ஆகும். 'உணவு உண்கிறேன், உண்டபின் வருவேன்' என்று கூறுவது வழாநிலை ஆகும். ஆனாலும், 'உண்டேன், வந்தேன்' என்னும் விடையை ஒரு காரணம் பற்றி ஏற்றுக் கொள்ளலாம். விரைந்து வருவேன் என்னும் குறிப்புத் தோன்ற 'உண்டேன் வந்தேன்' என்று கூறியதால், இது வழுவாயினும் வழு அமைதியாக ஏற்றுக் கொள்ளப்படும். இது, விரைவு காரணமாக எதிர் காலச் சொல் இறந்தகாலச் சொல்லாக வந்த வழு அமைதி ஆகும்.

**இலக்கணம்** : பேச்சு வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் திணை, பால், எண், இடம், காலம், மரபு முதலிய இலக்கண முறைக்கு மாறாக வருவனவற்றை ஒரு காரணம் கருதி இலக்கண முறையாக அமைத்துக் கொள்வது வழுவமைதி ஆகும்.
எ.டு. தாய் தன் குழந்தையை, 'என் கண்ணே! கண்மணியே' எனப் பாராட்டுவது அன்பு காரணமாக வந்த வழுவமைதி ஆகும்.

வழுவமைதி, திணை வழுவமைதி, பால் வழுவமைதி, இட வழுவமைதி, கால வழுவமைதி, மரபு வழுவமைதி எனப் பலவகைப்படும்.

**திணை வழுவமைதி** : உவப்பு, உயர்வு, இழிவு, சிறப்பு, சினம் ஆகியவை காரணமாக ஒருதிணைச் சொல் மற்றொரு திணைச் சொல்லாக வருவது திணை வழுவமைதி எனப்படும்.

எ.டு. 1. திங்களும் சான்றோரும் ஒப்பர் (உயர்வு)
2. அரசனே! நீயே எங்களுக்குத்தாய் (சிறப்பு)
3. மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா (இழிவு)
4. பசுவை, 'என் தாயே' என அழைத்தல் (உவப்பு)
5. குறிப்பறிய மாட்டாதவன் நன் மரம் (சினம்).

**பால் வழுவமைதி** : உவப்பு, உயர்வு, சிறப்பு, இழிவு, சினம் ஆகியவை காரணமாக ஒருபால் சொல் மற்றொரு பால் சொல்லாக வருவது பால் வழுவமைதி எனப்படும்.

**எ.டு.**

1. தாய் தன் மகளைக் 'கண்ணா! வா' என அழைப்பது உவப்பு நோக்கிக் கொண்ட பால் வழுவமைதி.
2. 'தமிழ்ச்செல்வன் வந்தார்' - தமிழ்ச்செல்வன் என்னும் ஒருமைக்கு 'வந்தார்' என்னும் பன்மை முடிவு வந்துள்ளது. இது வழுவாயினும் 'உயர்வு' நோக்கிய பால் வழுவமைதி ஆயிற்று.
3. 'தாயும் நீயே; தந்தையும் நீயே',
ஆயும் நின்பால் அன்பு கொண்டேன்
ஈண்டுத் தந்தையாகிய இறைவனைத் 'தாய்' எனப் பெண்பாலாக் கூறியது, 'சிறப்பு' நோக்கிக் கொண்ட பால் வழுவமைதி ஆயிற்று.
4. 'வாள் ஏந்தினும் இவன் பேடி' என்றது இழிவு நோக்கிக் கொண்ட பால்வழுவமைதி ஆயிற்று.
5. "எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத் துணையும் தேரான் பிறனில் புகல்" - ஈண்டு சித்தினால் பலர்பால் ஆண்பால் ஒருமை ஆயிற்று.

**இட வழுவமைதி**

சிறப்பு, உயர்வு ஆகியவை காரணமாகத் தன்மை, முன்னிலை, படர்க்கை இடச்சொற்கள் மாறிவருவது இடவழுவமைதி எனப்படும்.

எ.டு. தாய் தன் மகனை நோக்கி, 'அம்மாவுக்காக நீ இதைச்செய்' என்று கூறினாள் - இஃது எனக்காக என்னும் தன்மை இடச்சொல் 'அம்மா' எனும் படர்க்கை இடச்சொல்லாக வந்தது இடவழுவமைதி ஆகும்.

**கால வழுவமைதி**

விரைவு, தெளிவு, மிகுதி ஆகியவை காரணமாக ஒரு காலத்திற்குரிய சொல்லை வேறொரு காலத்திற்குரிய சொல்லாகக் கொள்வது காலவழுவமைதி ஆகும்.

எ.டு. "நல்லது செய்யின் சுவர்க்கம் புக்கான்".

தெளிவு பற்றி எதிர்காலம் இறந்த காலமாக் கூறப்பட்ட கால வழுவமைதி.

குறிப்பு : மூன்று காலத்திற்கும் பொதுவான தன்மை உடைய பொருள்

அல்லது நிகழ்கால வினைமுற்று கொடுத்துக் கூறல் வேண்டும்.

எ.டு. மலை நிற்கிறது.

ஆறு ஓடுகிறது.

**மரபுவழுவமைதி**

நம் முன்னோர் எப்பொருளை எச்சொல்லால் எம்முறையில் வழங்கினரோ, அப்பொருளை அச்சொல்லால் அம்முறைப்படியே நாமும் வழங்குவது மரபு ஆகும். ஆனால் ஏதேனும் ஒரு காரணம் பற்றி மரபு மீறி வழங்குதல் ஏற்றுக் கொள்ளப்படுமாயின் அது மரபு வழுவமைதி எனப்படும்.

எ.டு. கத்தும் குயிலோசை என்றன் காதில் விழ வேண்டும்

விளக்கம்: குயில் கூவும் என்பது மரபு. அதற்கு மாறாக, கத்தும் என்று கூறியது மரபு வழுவாயினும் பெருங்கவிஞர் பாடினார் என்னும் காரணம் நோக்கி மரபுவழுவமைதி ஆயிற்று.

**வேற்றுமை அணி**

தீயினால் சுட்டபுண் உள்ளாறும், ஆறாதே

நாவினால் சுட்ட வடு.

தீ உடலைச் சுடும்; தீச்சொல் உள்ளத்தைச் சுடும். சுடுதலால் தீயும் தீச்சொல்லும் ஒற்றுமை உடையன. ஆனால் தீப்புண் ஆறிவிடும்; தீய சொல்லால் உண்டான மனத்துன்பம் நீங்காது. தழும்புபோல நிலைத்திருக்கும். ஆகையால் தீயைவிட, தீய சொல் கொடுமையானது. இவ்வாறு ஒற்றுமையைக் கூறி வேறுபடுத்துவது வேற்றுமை அணியாம்.

**இலக்கணம்** : புலவர் ஒரு செய்யுளில் இரண்டு பொருள்களுக்கு உரிய ஒற்றுமையை முதலில் கூறிப் பின்னர் ஒரு காரணம் காட்டி இரண்டையும் வேறு படுத்திக் கூறுவது வேற்றுமை அணி எனப்படும்.

கூற்றினும் குறிப்பினும் ஒப்புடை இருபொருள்
வேற்றுமைப் படவரின் வேற்றுமை யணியே
(தண்டி 49)

எடு. அங்கண் விசும்பில் அகல்நிலாப் பாரிக்கும்
திங்களும் சான்றோரும் ஒப்பர்மன் - திங்கள்
மறுவாற்றும்; சான்றோர் அஃ தாற்றார் தெரு மந்து
தேய்வர் ஒருமா கறின்.

**விளக்கம் :** ஒளி தருவதில் நன்மை செய்வதிலும் சந்திரனும் சான்றோரும் சமம் என்றது ஒற்றுமை. சந்திரன் களங்கத்தை உடையது; ஆனால், சான்றோர் களங்கத்தைத் தாங்க மாட்டார்.

**விடை காண்போம்**

- உமருடன் ஹர்மூஸானுக்குப் பகை ஏற்படக் காரணம் என்ன?
- ஹர்மூஸானுக்கு உமர் கொடுத்த வாக்குறுதி என்ன?
- தனது அறிவாற்றலால் தண்டனையிலிருந்து ஹர்மூஸான் தப்பியது எப்படி?
- தன்வினை, பிறவினை என்றால் என்ன?
- வழு, வழாநிலை, வழுவமைதி-இவற்றை விளக்குக.
- திணை வழுவமைதியைச் சான்றுடன் விளக்குக.
- வேற்றுமையணியைச் சான்றுடன் விளக்குக.